

தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று முன்தினம் (12,07,2023) கனிம வளத்துறையின் செயல்பாடுகள், முன்னேற்றம், வருவாய் உயர்த்துதல் போன்றவை குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, இயற்கை வளங்கள் துறை சிறப்பு செயலாளர் திருமதி பூஜாகுல்கர்னி, கனிம வளங்கள் துறை இயக்குநர் எல். நிர்மல்ராஜ், மற்றும் கனிம வளத்துறை மண்டல, மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



'முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழி கருத்தரங்கத்தை நேற்று முன்தினம் (12.07.2023) சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து, கிரேக்கக் காப்பியங்களான ஹோமரின் இலியத் மற்றும் ஓமரின் ஒடிசி ஆகிய புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை ந.அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்(பொறுப்பு) கோபிநாத் ஸ்டாலின், நூலாசிரியர் சின்னத்தம்பி ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில்

# ரூ.276.15 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 13-

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.276.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.56.31 கோடி மதிப்பீட்டிலான மனை மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 276 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகக் கட்டடங்கள், வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம், சமுதாயக்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 56 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்ட மனை மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சமூகத்திலுள்ள அனைத்து வருவாய்ப் பிரிவினர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தி தருவதை தலையாய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் சுற்றுச் சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வீட்டுவசதி தீர்வுகளை வழங்கி வருகிறது. மேலும், தற்போது இவ்வாரியம் உயரமான கட்டடங்கள், வணிக மற்றும் அலுவலகக் கட்டடங்கள், மறு கட்டுமானத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், சௌரிபாளையத்தில் 8 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்டம், விருது நகர் வட்டம், கூரைகுண்டு கிராமத்தில்,

60 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 222 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், கூடலூர் கிராமத்தில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 30 குடியிருப்புகள்; தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், வடவீரநாயகன்பட்டி கிராமத்தில் 35 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 122 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், முள்ளம் கிராமத்தில் 17 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவிலும், மயிலாப்பூரில் 7 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவான்மியூரில் 8 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி கிராமத்தில் 10 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கட்டடங்கள் மற்றும் சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாத்தூர் கிராமத்தில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம்;

சென்னை மாவட்டம், திருவான்மியூரில் 6 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில், தூண்தளம் மற்றும் 5 தளங்களைக் கொண்ட 10 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதியில் 22 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 48 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்பு கள், 26 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 56 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 27 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் 60 உயர் வருவாய் பிரிவு குடியிருப்புகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், நல்லூர் கிராமத்தில் 25 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 70 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; என மொத்தம் 276 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகக் கட்டடங்கள், வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம், சமுதாயக்கூடம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மனை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம், புதுக் கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் 56 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 1603 மனைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், வீட்டு வசதி வாரியத்தின் இயக்குநர் எ.சரவணவேல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக சட்டம் இயற்றலாமா?

## அமைச்சர் துரைமுருகன் கடிதம் ... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி!

இன்னுமொரு சீரிய நடவடிக்கை என்னவென்றால், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற உத்தரவை பிறப்பித்து, அதன் மூலம் உரிய பயிற்சி பெற்ற யாராக இருந்தாலும், சாதிகளைக் கடந்து அர்ச்சகர் ஆகலாம் என்ற நிலையை ஏற்படுத்தி மானுடத்தை உயர்த்தியது.

எங்களுடையஇன்னொருஆலோசனை என்னவெனில், மதங்களுக்கிடையேயான பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன், ஒன்றிய அரசு இந்துமத சாதிகளுக்கிடையே பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றி சாதீய ஏற்றத்தாழ்வை சமன் செய்ய வேண்டும் என்பது.

ஏற்கனவே, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையை பாதிக்கும் எந்த சட்டத்தையும் ஒன்றிய அரசு நிறைவேற்றக் கூடாது என்பது தான். இந்த பொது சிவில் சட்டம், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக, அரசமைப்பு சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 29 ஆகியவற்றை மீறிய சட்டமாக திராவிட முன்னேற்றக் கழகம் பார்க்கிறது.

பொது சிவில் சட்டம், ஏற்கனவே இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956, பிரிவு 2 (2)ன்படி பட்டியலின மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள் ஏனைய இந்துமத மக்களின் பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபட்டது எனினும், அவற்றைத் தடைசெய்யக் கூடாது என்று கூறுகிறது.

மேலும், இந்து மதத்தில் மட்டும் தான் கூட்டுக் குடும்ப முறை நடைமுறையில் உள்ளது. இந்த முறையின் மூலம் வருமானவரித் துறை கூட்டுக் குடும்பத்தையே மொத்தமாக ஒரு வரி செலுத்துபவராக ஏற்றுக் கொண்டுள்ளது.

**வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்தியாவின் சிறப்பு!**

அரசமைப்புச் சட்ட அட்டவணை VIல் உள்ளபடி, அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிஜோரம் ஆகிய மாநிலங்களுக்கு திருமணம், மணவிலக்கு, சமூகப் பழக்க வழக்கங்கள் ஆகியவை மற்ற மாநிலங்களிலிருந்து வேறுபட்டவை.

தமிழகத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் 87 சதவிகிதம், இஸ்லாமியர்கள் 6 சதவிகிதம், கிருத்தவர்கள் 7 சதவிகிதம். இந்த மக்கள் அனைவரும் மதங்களைக் கடந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள். பொது சிவில் சட்டம் இத்தகைய ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் வாய்ப்பு உள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது உலக நாடுகளே வியந்து பாராட்டும் நாடு, நமது இந்திய நாடு என்பதை ஒன்றிய அரசு மறந்துவிடக் கூடாது.

எனவே, 22வது சட்ட ஆணையம் 21வது சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, பொது சிவில் சட்டத்துக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் எழுதியுள்ள விளக்கக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தென்மேற்கு பருவ மழையை எதிர்கொள்ள

# நீலகிரி மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, ஜூலை 14 -

நீலகிரி மாவட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூராட்சிகள் துறை) சார்பில் ரூ.84 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்து பார்வையிட்டு, தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கல்வெட்டுகள் அனைத்தும் தூர்வாரப்பட்ட காரணத்தினால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏதும் இல்லை என அறிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூராட்சிகள் துறை) சார்பில், குன்னூர் வட்டம் ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட பந்துமை முதல் ரேலியாடேம் வரை ரூ.58 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலையினையும், பந்துமையில் ரூ.4 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட வெள்ள தடுப்பு சுவரினை யும், அருவங்காடு ஓசட்டியில் ரூ.12 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தினையும், காரக்கொரையில் ரூ.10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியினையும் என மொத்தம் ரூ. 84 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை முன்னுரிமை அளித்து மேற்கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து இன்றைய தினம் குன்னூர் வட்டம் ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட பந்துமை முதல் ரேலியாடேம் வரை ரூ.58 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலையும், பந்துமையில் ரூ.4 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட வெள்ள தடுப்புச் சுவரும், அருவங்காடு ஓசட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடமும், காரக்கொரையில் ரூ.10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டியும் என மொத்தம் ரூ.84 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட பணிகள் திறந்து வைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை என இரண்டு பருவ காலங்களில் மழை பெய்வது வழக்கம். குறிப்பாக, தென்மேற்கு பருவமழையானது கூடலூர் பகுதியில் அதிகமாகவும், உதகை மற்றும் குந்தா பகுதியிலும்; மழை பெய்யும். வடகிழக்கு பருவமழை கோத்தகிரி, குன்னூர் பகுதியில் பெய்யும். சென்ற வருடம் 239 மி.மீட்டர் மழையும் நடப்பாண்டு 264.2 மி.மீ மழை இன்று வரை பெய்துள்ளது நீலகிரி மாவட்டத்திற்கு மழை மிக அவசியம். கூடலூரில் பெய்து வரும் இந்த மழையினால் அப்பகுதி மக்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரம் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது.

மேலும், தென்மேற்கு பருவ மழை தொடங்குவதற்கு முன்பாகவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அரசுத்துறை அலுவலர்களுடன் மூன்று முறை ஆய்வு கூட்டங்கள் நடத்தி அறிவுரைகள் வழங்கியதன் அடிப்படையில் அனைத்துத் துறை அலுவலர்களும் முன்னேற்பாடு பணிகளை ஏற்கனவே மேற்கொண்டு உள்ளார்கள். அதனை தொடர்ந்து எனது தலைமையிலும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலும் தென்மேற்கு பருவமழை குறித்து கூட்டங்கள் நடத்தப்பட்டு அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு மீட்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் வைக்கப்பட்டதன் மூலம் மழையினால் நமது மாவட்டத்தில் பெரிய அளவில் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை.

மேலும் 6 வட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மழைக்காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய 283 பகுதிகளை கண்காணிக்க 42 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்கள் 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றன. மேலும், இயற்கை இடர்பாடுகளால்; பாதிக்கப்படும் பொதுமக்களை தங்க வைக்க ஏதுவாக, மாவட்டம் முழுவதும் 456 பாதுகாப்பு நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளது. இம்முகாமில் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அனைத்தும் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

இது தவிர மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏற்படும் போது பொதுமக்கள் மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு அறையில் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 மற்றும் 0423 2450034, 2450035 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் உடனடியாக அவ்விடத்திற்கு சென்று மீட்புப்பணிகளில் ஈடுபடும் வகையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நமது மாவட்டத்தில் 3600 முதல்நிலை பொறுப்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். 200 ஆப்தமித்ரா தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களும் தயார் நிலையில் உள்ளனர். தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவினர், ஏற்கனவே நமது மாவட்டத்திற்கு வருகை தந்து இரண்டு குழுக்களாக பிரிந்து செயல்பட்டு வருகின்றனர். மழை தொடங்குவற்கு முன்பாகவே கூடலூர், உதகை பகுதியில் உள்ள கால்வாய்கள் அனைத்தும்தூர்வாரப்பட்ட காரணத்தினால், இப்பகுதியில் இந்த மழையினால் பெரிய அளவில் பாதிப்பு ஏதும் இல்லை. நெடுஞ்சாலைத்துறை சார்பில் சுமார் 12,000 மணல் மூட்டைகளும், தீயணைப்புத்துறை மூலம் பவர்ஷா கருவிகள் தயார் நிலையில் வைக்கப் பட்டு தென்மேற்கு பருவ மழையினை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் தமிழக மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கிளன்மார்கன் அணைக்கட்டு பகுதியில் படகு இல்லம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து நேரில் பார்வையிட்டுகள ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இப்ராகிம்ஷா, ஜெகதளா பேரூராட்சி தலைவர் செல்வி. பங்கஜம், துணைத்தலைவர் ஜெய்சங்கர், உதவி செயற்பொறியாளர் சுப்ரமணியன், கோத்தகிரி வட்டாட்சியர் திருமதி.கோமதி, ஜெகதளா பேரூராட்சி செயல் அலுவலர் சதாசிவம், இளநிலை பொறியாளர் வின்சென்ட், 15வது வார்டு உறுப்பினர் திருமதி.சுகுணாம்பாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

## 'வாட்ஸ் அப்'பில் வந்தது!






விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு சங்கீதமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் பாரதி நாகராஜ், ஊராட்சி மன்ற தலைவர் கோமதி குணசேகரன், அரசு வழக்கறிஞர் பாபு, குழு ஒருங்கிணைப்பு ராதிகா பாபு, கிளை செயலாளர் ஏ.நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.